


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பறக்கையில் செயல்பட்டு வரும் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்பவர்களுக்கு "குரல் வழி தகவல் (வாய்ஸ் மெசேஜ்) அனுப்பும் பணியினை மாவட்ட ஆட்சியர் சிறு கூட்டரங்கில் இன்று (04.07.2016) தொடங்கி வைத்தார். கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு. இராமநாதன், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தலைவர் முனைவர். ரவிமுருகன் ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 416/2016 நாள்: 04.07.2016

**கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்பவர்களுக்கு வாய்ஸ் மெசேஜ் அனுப்பும் பணியினை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (04.07.2016) தொடங்கி வைத்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பறக்கையில் செயல்பட்டு வரும் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்பவர்களுக்கு வாய்ஸ் மெசேஜ் அனுப்பும் பணியினை மாவட்ட ஆட்சியர் சிறு கூட்டரங்கில் இன்று (04.07.2016) தொடங்கி வைத்து, தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்பவர்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கிடவும், அவர்களது வருவாய் பெருகிடும்வகையில் பறக்கையில் செயல்பட்டு வரும் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும் ரிலையன்ஸ் பவுன்டேசன் தகவல் தொடர்பு நிறுவனத்துடன் இணைந்து முதல் கட்டமாக 20,000 கால்நடை வளர்ப்பவர்களுக்கு, கால்நடை வளர்ப்பில் கடைபிடிக்க வேண்டிய செய்திகள் மற்றும் பராமரிப்பு குறித்து நாள்தோறும் "குரல்வழித்தகவல்" இன்று முதல் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் கால்நடை வளர்ப்பவர்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருக்கும்பட்சத்தில் இலவச தொலைபேசி எண்ணான 18004198800 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு. இராமநாதன், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தலைவர் முனைவர். ரவிமுருகன், உதவி இயக்குநர்கள் திரு. தயாசேகர், திரு. ரிச்சர்டுராஜ், துணை இயக்குநர் திரு. பின்டன் மிசியர், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், முன்னோடி வங்கி மேலாளர் திரு. விஸ்வநாதன், திரு. ராதாகிருஷ்ணன், உதவிப் பேராசிரியர் திரு. மதன்மோகன், ரிலையன்ஸ் பவுண்டேசன் மேலாளர் திரு. ஆன்றனி எட்வட் சிங் மற்றும் முன்னோடி கால்நடைப் பண்ணையாளர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.